2008 ஏப்ரல் 30]

குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என்று உறுதி செய்துகொண்ட பிறகே, சம்பந்தப்பட்ட அலுவலரால் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மனுதாரர்கள் உரிய சான்றிதழ்களை அளிப்பார்களேயானால் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) வாகனங்களில் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே, . . .

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. சி. ஞானசேகரன். என்ன? சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடம் நம்முடைய தமிழகத்தில் தங்களுடைய கார் போன்ற வாகனங்களிலே யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது எனக் கேட்டு அறிவிப்புக் கொடுத்திருந்தேன். தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள், அதேபோல, இந்த அவையினுடைய சபாநாயகராகிய தாங்கள் மற்றும் துணை சபாநாயகர் மற்றும் இங்கே இருக்கக்கூடிய கொறடா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இருக்கக்கூடிய செயலாளர்கள் இப்படிப்பட்டவர்கள் மட்டுமே சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு போகலாம் என்று விதி இருப்பதாக நாங்கள் அறிகிறோம். ஆனால், இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள்-equal to the

[திரு. சி. ஞானசேகரன்] [2008 ஏப்ரல் 30

Chief Secretary according to the protocol-அவர்களுக்கே அந்தத் தகுதியில்லை. ஆனால், first grade municipality-யினுடைய ஆணையர்களுக்கு இணையாக வைக்கப்பட்டிருக்கிற மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் சில பேர், D.S.P. போன்றவர்கள், R.D.O. போன்றவர்கள் எல்லாம் தங்கள் கார்களில் சிவப்பு விளக்கைப் பொருத்திக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், சொல்லப் போனால், சில நேரங்களிலே, கடத்தலுக்கும், மற்றவற்றுக்கும் உரிய சில சமூக விரோதிகள்கூட சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு, check post வருகிறபோது நேராகப் போய்க்கொண்டிருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறபோது, நமக்கு வருத்தமாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், traffic constable அந்த சிவப்பு விளக்கைப் பார்த்தவுடன் யார் உள்ளே இருக்கிறார்கள் என்று தெரியாமலே, salute அடிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் (குறுக்கீடு) one minute. நீங்கள் எப்போது பார்த்தாலும் சிவப்பு விளக்கு, சிவப்பு விளக்கு என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறீர்கள்! முதலில் விஷயம் என்ன என்று சீக்கிரம் அதைச் சொல்லி முடியுங்கள். (சிரிப்பு)

முற்பகல் 10-45

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது காரில் உள்ள சிவப்பு விளக்கை மட்டுமே; மற்ற சிவப்பு விளக்குப் பகுதிகளுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. (சிரிப்பு).

இங்கே, தமிழகத்தில் இருக்கக்கூடிய சட்ட திட்டங்களுக்கு, விதிமுறைகளுக்குட்பட்டு யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்பதைத் தமிழக அரசு இந்த அவையின் மூலமாகத் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும். ஏற்கெனவே, மதுரை உயர் நீதிமன்றத்தினுடைய கிளையிலே இதுகுறித்து ஒரு வழக்கறிஞர் ஒரு வழக்கைத் தொடுத்து, அந்த வழக்கிலும்கூட ஒரு தீர்ப்பு தெளிவாக வந்திருக்கிறது. ஆனால், அந்தத் தீர்ப்பினுடைய அடிப்படையிலும் சரி, அல்லது அந்த விதிமுறையின் அடிப்படையிலும்கூட, தகுதியில்லாதவர்கள் பல பேர் இப்போது தமிழகத்திலே சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைக்கு நீங்கள் முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்று சொன்னால், நிச்சயமாகப் பெருத்த சந்தேகம் ஏற்படும். யார் யாரோ அவ்வாறு

2008 ஏப்ரல் 30] [திரு. சி. ஞானசேகரன்]

போகக்கூடாதவர்கள் எல்லாம் சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு சென்றுகொண்டிருக்கின்ற ஒரு நிலை வந்துகொண்டிருக்கிற காரணத்தால், ஒரு பெரிய குழப்பம் நிலவுகிறது. சொல்லப் போனால், நமது பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்களிலே அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சியினுடைய தலைவர்கள்கூட சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழகத்தில் அது இல்லை. அப்படி இருக்கிறபோது, நான் நம்முடைய மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழக அரசு சார்பாக அந்த விதிமுறைகளின்படி, யார் யாரெல்லாம் தமிழகத்திலே சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்பதை இந்த அவையின் மூலமாகத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அப்படி விதிகளை மீறி சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்கின்றவர்கள்மீது அரசு என்ன கடுமையான நடவடிக்கை எடுக்கப் போகிறது; எப்படி அதைத் தடை செய்யப்போகிறது என்பதை விளக்க வேண்டும் என்று கோரி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழக அரசின் சார்பாக, யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்று அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், நீங்கள் இப்போது சொல்வதுபோல், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்கூட அந்தச் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்கிறார்கள். இப்போது இருக்கின்ற சட்டப்படி, Chief Secretary-க்குக்கூட, அந்த சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ள அனுமதி இல்லை. 19 பதவிகளுக்கு மட்டும்தான் உள்ளது. Governor இல் ஆரம்பித்து அமைச்சர்கள் வரை அதைப் பொருத்திக்கொள்ளலாம் என்று இருக்கிறது. இதற்குத் தெளிவான அரசு ஆணை ஏற்கெனவே வெளியிடப்பட்டிருக்கிறது. இப்போது மத்திய அரசின் சார்பாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டியில் மூன்று அமைச்சர்கள், மத்திய அரசில் உள்ள செயலாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து ஆலோசித்து இந்தியா முழுவதும் ஒரே அளவில் சட்டம் கொண்டு வருவதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட்டு, இரண்டு மூன்று கூட்டங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. வெகுவிரைவிலே மத்திய அரசு சார்பாக அதை அறிவிக்க இருக்கிறார்கள். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

கேட்டுக்கொண்டதைப்போல, தமிழ்நாடு அரசு சார்பாக யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் பொருத்திக்கொள்ளலாம் என்ற அரசு ஆணையை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேசையிலே அதை வைக்கிறேன். பார்த்துக்கொள்ளுங்கள். யார் யாரெல்லாம் சிவப்பு விளக்கைப் போட்டுக்கொண்டு போகக்கூடாதோ, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் இந்தச் சபையின் மூலமாக இப்போது நீங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நடவடிக்கை எடுத்து, வைக்கக்கூடாதவர்கள் வைக்காத அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) வேளாண் பட்டம்/பட்டயம் பெற்றவர்களின் வேலைவாய்ப்பிற்கு வயது வரம்பைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், என்ன?

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவிப்பிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வேளாண்மைத் துறையில் பட்டம் படித்தவர்களுக்கும், டிப்ளோமா படித்தவர்களுக்கும் 1,707 பேர்களுக்கு 18 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, வேலை நியமன உத்தரவு விரைவிலே வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். 18 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, அந்த வேலை நியமன உத்தரவு வழங்கப்படும் என்ற அறிவிப்பு வந்த காரணத்தினால், அந்த வேளாண்மைப் பட்டப் படிப்புப் படித்தவர்களுக்கு வயது முதிர்ந்து இருக்கிறது; அவர்கள் அந்த வயது வரம்பைத் தளர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், P & AR துறையின் பொறுப்பு வகிக்கின்ற மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருப்பதைப்போல் அந்த வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு, அதற்கான வயது வரம்பைத் தளர்த்தி அரசு ஆணை வெளியிட்டு, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.